**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள்.30.09.2019**

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2019ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.கி.ஜெயராமராஜா, எம்.ஏ.,
ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)**இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் :509** அனுமதிக்கப்பட்டது.
( ந.க.எண்.2146/2019/சி1).

**2)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் :510** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண்.2146/2019/சி1).**

3) போடிநாயக்கனூர் நகராட்சி வாகன எண்:TN60Y6345 வண்டிக்கு வாகன காப்பீடு 01.10.2019 உடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.12,484/– தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண் :511** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.4458/2019/இ1)**

**4)** போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட TVKK நகர் அரசு கட்டிடங்களை இடிப்பது சம்பந்தமாக நகராட்சி தரப்பில் Number appeal O.S.66/2015–ஐ எதிர்த்து மாண்பு மிகு சார்பு நீதிமன்றம், தேனியில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு காலதாமத மன்னிப்பு மனு விசாரனையில் முடிவடைந்து Argument Stage–ல் உள்ளது. இந்நகராட்சி சார்பாக போடிநாயக்கனூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்ற வழக்கு எண்.E.P No.10/2017 மற்றும் I.A. No.61/2018–ல் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், இந்நகராட்சி அரசு வழக்கறிஞர், திரு.பி.ஆர்.பாலமுரளி என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.13,000/– வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.பி.ஆர்.பாலமுரளி வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**தீர்மான எண் :512** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.2702/2019/இ1)**

5) போடிநாயக்கனூர் நகராட்சி பார்க் ஸ்டாப், பயணிகள் நிழற்குடை வழக்கு எண். O.S.129/2014 வழக்கில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு அதன் பின்பு வழக்கை திரும்ப பெற வாதி தரப்பில் மனு செய்யப்பட்டு அதனை கடுமையாக ஆட்சேபித்து இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து அசல் வழக்கை நகராட்சிக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி சார்பாக போடிநாயக்கனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிட்ட, இந்நகராட்சி அரசு வழக்கறிஞர், திரு.பி.ஆர்.பாலமுரளி என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.3,000/– வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.பி.ஆர்.பாலமுரளி வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**தீர்மான எண் :513** ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
**(ந.க.எண்.2702/2019/இ1)**

6)தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்ககத்தின் (Day-NULM) கீழ் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் தங்குமிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி சிறப்புக் கூட்டத்தினை மேற்பார்வை மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள இயக்குநர், AHM தொண்டு நிறுவனம் போ–தர்மத்துப்பட்டி, போடிநாயக்கனூர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு செப்டம்பர் 2019 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சிறப்புக் கூட்டத்திற்கு மேற்பார்வை மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவினத்தை மானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்பார்வை மற்றும் பராமரித்தல் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மான்யம் வரப்பெற்றவுடன் அதனை ஈடு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி உறைவிடம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், மறறும் ஒப்பந்தத்தின் அடிப்படையில், **மத்திய அரசு மானியம் பெறப்படும் வரையில்** உறைவிடம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு தேவையான தொகை நகராட்சி மூலம் வழங்கிடவும், மத்தி அரசு மான்யம் பெறப்பட்டபின் செலவுத்தொகை மீட்பு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :514** அனுமதிக்கப்படுகிறது.
**(ந.க.எண்.221/2017/இ1)**

7) இந்நகராட்சியில் இயங்கி வரும் பொதுச்சுகாதாரப் பிரிவின் மூலம், தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக "SWACHHATA HI SEVA" (தூய்மையே சேவை) என்ற திட்டத்தின் மூலமாக செப்டம்பர்–11 முதல் அக்டோபர்–1 வரை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட உள்ளூர் மற்றும் வெளியூர் கலைக்குழுக்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தொகை ரூ. (ஒரு லிட்டர்) |
|---|---|---|
| 01 | கரிசல் கலைக்குழு, பெரியகுளம் | 5000/– |
| 02 | சங்கிலி கலைக்குழு, அல்லிநகரம். | 8000/– |
| 03 | மருதம் கலைக்குழு, உத்தமபாளையம் | 7500/– |

**அலுவலக்குறிப்பு:** மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகை வழங்கிய கரிசல் கலைக்குழு,
பெரியகுளம் நிறுவணத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி.

**தீர்மான எண் :515** அனுமதிக்கப்படுகிறது.
**ந.க.எண். 6465/2016/H2.**

**8)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகள், புதிய பேருந்து நிலையம், நகர் நல மையம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு **13.09.2019–ம்** தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s.MRM Systems,
   Bodinayakanur.
2. M/s. PHOENIX Systems,
   Bodinayakanur.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகள், புதிய பேருந்து நிலையம் நகர்நல மையம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணி | ரூ.2,00,000/– | 1. M/s.MRM Systems, Bodinayakanur. | ரூ.31,000 /– |
| | | | 2. M/s.PHOENIX Systems, Bodinayakanur. | ரூ.30,000/– |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.PHOENIX Systems, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை **2019–2020–ம்** ஆண்டு கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் :516** அனுமதிக்கப்படுகிறது.
**(ந.க.எண்:3088/2019/இ1)**

9) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2019–2020 ம் ஆண்டிற்கு தேவையான தளவாடசாமான்கள் விநியோகம் செய்ய18.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற 2 ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விநியோகம் செய்யப்பட வேண்டிய பொருள்களின் விபரம் | Agro Engineering Co-op Service Centre Usilambatti. | ESWARI ENTERPRISES DEVAKOTTAI |
|---|---|---|---|
| 1 | கை கூட்டுமார் | 40 | 30 |
| 2. | மண்வெட்டி | 700 | 650 |
| 3. | பிக்காஸ் | 1000 | 940 |
| 4. | கடப்பாறை | 125 | 1150 |
| 5. | சாக்கடை கரண்டி (சிறியது) | 700 | 650 |
| 6. | சாக்கடை கரண்டி (பெறியது) | 750 | 725 |
| 7. | முள்கம்பி (சிறியது) | 800 | 775 |
| 8. | முள்கம்பி (பெறியது) | 850 | 825 |
| 9. | இரும்புத்தட்டு (சிறியது) | 400 | 350 |
| 10. | அரிவாள் | 800 | 700 |
| 11. | கையோடு | 150 | 125 |
| 12. | தட்டிமார் (பெறியது) | 750 | 590 |
| 13. | சம்பட்டி | 900 | 850 |
| 14. | இரும்பு வாளி | 350 | 300 |
| 15. | முள்கம்பு | 750 | 695 |
| 16. | பிரஸ் | 650 | 590 |

**அலுவலக்குறிப்பு :** மேற்கண்ட 2 ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த தொகை வழங்கிய ESWARI ENTERPRISES, DEVAKOTTAI. நிறுவணத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுகதிக்கலாம்.

**தீர்மான எண் :517** அனுமதிக்கப்படுகிறது.

**ந.க.எண். 3516/2019/H2.**

10) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2019–2020 ம் ஆண்டிற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள்
விநியோகம் செய்ய 18.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற 2 ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விநியோகம் செய்யப்பட வேண்டிய பொருள்களின் விபரம் | Agro Engineering Co-op Service Centre Usilambatti. | ESWARI ENTERPRISES DEVAKOTTAI |
|---|---|---|---|
| 1 | ஒளிரும் சட்டை(BMCகுறியீடு) | 750 | 725 |
| 2. | தலை கவசம் | 525 | 515 |
| 3. | கையுறை | 750 | 700 |
| 4. | காலுறை | 1750 | 1700 |
| 5. | மழையங்கி | 1800 | 1720 |
| 6. | முககவசம் | 550 | 510 |

**அலுவலக்குறிப்பு**

மேற்கண்ட 2 ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த தொகை வழங்கிய ESWARI ENTERPRISES, DEVAKOTTAI. நிறுவணத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுகதிக்கலாம்.

**தீர்மான எண் :518** அனுமதிக்கப்படுகிறது.

**ந.க.எண். 3515/2019/H2.**

11) போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட விபரப்படியான வாகனங்களுக்கு TEXCO ஓட்டுநர் திரு.கனகராஜ் என்பவரால் சாலைவரி மற்றும் பசுமை வரி செலுத்தப்பட்டு அதற்கான ரசீது நகல்களை இணைத்து தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே கீழ்க்கண்ட விவரப்படியான மொத்த தொகை ரூ.26,727—ஐ ஓட்டு நர் திரு. கனகராஜ் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன விவரம் | சாலைவரி தொகை. ரூ. | பசுமை வரி தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | TN60AX1176 (compactor) | 8866 | – |
| 2 | TN60S5118 (compactor) | 8806 | – |
| 3 | TN60Z3534 (Septictank) | 4571 | – |
| 4 | TN60V0533 (D.Placer) | 3029 | 1515 |
| | Total | 25212 | 1515 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :519** அனுமதிக்கப்படுகிறது.

**ந.க.எண். 3736/2019/H2.**

12) நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15415/2013/குவ1. நாள்.12.07.2019 ஆம் தேதிய கடிதத்தில் தமிழக அரசின் முன்னோடித் திட்டமான **மழைநீர் சேகரிப்பு திட்டம்** இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் சீரிய முறையில் செயல்படுத்தும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. . அதனடிப்படையில் இந்நகராட்சியில் தமிழக அரசின் முன்னோடி திட்டத்தினை 100 சதவீதம் செயல்படுத்தும் பொருட்டு மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல்/ புனரமைப்பதற்கான அறிவிப்புகள் 20000 எண்ணமும் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற வாசகம் உள்ள ஸ்டிக்கர் 10000 எண்ணமும் திருச்சி மல்டி பார்ப்பஸ் அச்சகத்தில் அச்சடித்துக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச மொத்த செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத் தொகையினை 2019—2020 ஆம் ஆண்டு பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழக அரசின் முன்னோடித் திட்டமான **மழைநீர் சேகரிப்பு திட்டம்** இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் சீரிய முறையில் 100 சதவீதம் செயல்படுத்தும் பொருட்டும், மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, திருச்சி மல்டி பார்ப்பஸ் அச்சகத்தில் அறிவிப்பு நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அச்சடித்து பெற்றுக் கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் :520** அனுமதிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3065/2019/எப்1)**

13) போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளுக்குரிய 66211 வாக்காளர்களின் பட்டியல் தொடர்பான வாக்காளர் சரிபார்ப்பு பணிகள் ( EVP Check List ) வீடு வீடாக சென்று ஒவ்வொரு வாக்காளர்களாக ஆய்வு செய்து , Mobile App-ல் ஏற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 01.09.2019 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தார். மேலும் மேற்படி பணியினை BLO –க்கள் மூலம் 30.09.2019க்குள் முடிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். எனவே, தேர்தல் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மேற்படி பணிக்கு தேவையான வாக்காளர் சரிபார்ப்பு படிவம் ( EVP Check List ) னை உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று, அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **அய்யப்பா ப்ளக்ஸ் போடிநாயக்கனூர்** நிறுவனத்தில் 70000 பிரதிகள் அச்சடித்தற்கான செலவினத் தொகை ரூ.49,000/– ஆகும். மேற்படிசெலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டிசமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. தேர்தல் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யப்பா ப்ளக்ஸ் போடிநாயக்கனூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும், மேற்படி 70000 பிரதிகள் அச்சடிதமைக்கான தொகை ரூ.49,000/–த்தை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :521** அனுமதிக்கப்படுகிறது.
**(ந.க.எண்.853/2019/எப்1)**

14) போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நிறைவேற்றப்பட்ட நலப்பணிகள் மற்றும் வளர்ச்சித்திட்டப் பணிகளை தொழில் மலரின் வெளியிட்டமைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உரிய தொகையை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் | தொகை |
|---|---|---|
| 1 | மாலை மலர் | ரூ.14,618/– |
| 2 | தினமணி | ரூ.21,000/– |
| 3 | மக்கள் குரல் | ரூ.12,600/– |
| | **மொத்தம்** | **ரூ.48218** |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் :522** அனுமதிக்கப்படுகிறது.
**(ந.க.எண்.3959/2019/இ1)**
**(ந.க.எண்.3779/2019/இ1)**

15) இந்நகராட்சியில் மொத்தமுள்ள 20665 வீடுகளில் உள்ள கழிப்பறைகளில் உள்ள காற்று போக்கிகள் முறையாக பராமரிக்கப்படாததால் கொசு உற்பத்தியாக வியாதிகளை பரப்பும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட வீடுகளின் கழிப்பறைகளில் உள்ள காற்று போக்கிகளில் கொசு வலை கட்டிடவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் :523** அனுமதிக்கப்படுகிறது.
**ந.க.எண். 4554/2019/H2.**

16) இந்நகராட்சிக்கு அரசு ஆணை எண்.101. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன்படி 270 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுவதில் தற்போது 67 பணியாளர்கள் மட்டுமே உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் out sourcing முறையில் பணியமர்த்தி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி கோரப்பட்டது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27176/பி3/2018. நாள்.01.11.2018ல் 70 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி கொள்ளவும், BIO-METRIC முறையிலான வருகைப் பதிவேட்டினை சரிபார்த்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் மூன்றாண்டு காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டு 70 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் Ourland Engineering Works Pvt.Ltd.Chennai என்ற நிறுவனம் மூலம் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.330/–ஆகும். தற்போது2019–2020 ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். 11793. நாள்.26.08.2019.ல் ரூ.30/– உயர்த்தி ரூ. 360/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான கூடுதல் செலவினம் ரூ. 7,66,500/– ஆகும். மேலும் 70 துப்புரவு பணியாளர்களுக்கான தளவாடச்சாமான்கள்மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மூலம் வழங்க அதற்கான கூடுதல் செலவீனமாக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவீனத்தொகையான ரூ. 1,02,08,888/– ல் 10 சதவீதமான ரூ.10.2 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட இரண்டு கூடுதல் உத்தேச செலவினமான ரூ.17.9 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) ஒப்புதல் அளிக்கலாம்.
2) 2019-2020ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய உயர்வினை கருத்தில் கொண்டு ரூ.30/– உயர்த்தியும், மேலும் துப்புரவு பணியாளர்களுக்கான தளவாடச்சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மூலம் வழங்கவும் Ourland Engineering Works Pvt.Ltd.Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :524** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண். 3791/2018/எச்2).**

17) இந்நகராட்சிக்கு அரசு ஆணை எண்.101. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன்படி 270 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுவதில் தற்போது 67 பணியாளர்கள் மட்டுமே உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் out sourcing முறையில் பணியமர்த்தி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி கோரப்பட்டது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.28369/J3/2018. நாள்.22.11.2018ல் 50 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி கொள்ளவும், BIO-METRIC முறையிலான வருகைப் பதிவேட்டினை சரிபார்த்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் மூன்றாண்டு காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டு 50 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் Ourland Engineering Works Pvt.Ltd.Chennai என்ற நிறுவனம் மூலம் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.330/—ஆகும். தற்போது2019—2020 ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். 11793. நாள்.26.08.2019.ல் ரூ.30/— உயர்த்தி ரூ. 360/— ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான கூடுதல் செலவினம் ரூ. 5,47,500/— ஆகும். மேலும் 50 துப்புரவு பணியாளர்களுக்கான தளவாடச்சாமான்கள்மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மூலம் வழங்க அதற்கான கூடுதல் செலவீனமாக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவீனத்தொகையான ரூ. 73,00,000/— ல் 10 சதவீதமான ரூ.7.3 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட இரண்டு கூடுதல் உத்தேச செலவினமான ரூ.12.8 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) ஒப்புதல் அளிக்கலாம்.
2) 2019-2020ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய உயர்வினை கருத்தில் கொண்டு ரூ.30/— உயர்த்தியும், மேலும் துப்புரவு பணியாளர்களுக்கான தளவாடச்சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மூலம் வழங்கவும் Ourland Engineering Works Pvt.Ltd.Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :525** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண். 5086/2018/எச்2).**

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி